செ.வெ.எண் : 434

08.08.2013

செய்தி வெளியீடு

<u>தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற விண்ணப்பிக்க கால அவகாசம் 20.08.2013 வரை நீட்டிப்பு</u>

தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி பெறுவதற்கு **10.08.2013** வரை ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்யலாம் என்ற **கால அவகாசம் தற்போது 20.08.2013** வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் ஆதிதிராவிடர்கள் உரிய ஆவணங்களுடன் http://application.tahdco.com என்ற இணையதள முகவரிக்கு சென்று விண்ணப்பத்தினை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யும்போது குடும்ப அட்டை அல்லது இருப்பிட சான்று, சாதிச் சான்று, குடும்ப ஆண்டு வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை உரிய இடத்தில் பதிவு செய்ய வேண்டும். அதுபோல் திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் அதற்கான இடத்தில் குறிப்பிட வேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும். இக்கால நீட்டிப்பினை ஆதிதிராவிட மக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குநர்,
தாட்கோ, சென்னை–101

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9